II.—CALLING ATTENTION TO NON-PAYMENT OF SALARY TO TEACHERS IN RADHAPURAM AND THREE OTHER PANCHAYAT UNION ELEMENTARY SCHOOLS IN TIRUNELVELI DISTRICT AND MANDAPAM PANCHAYAT UNION SCHOOLS IN RAMANATHAPURAM DISTRICT.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வைக் குறித்து மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் பஞ்சாயத்து யூனியன், திருச்செந்தூர் பஞ்சாயத்து யூனியன், வாசுதேவநல்லூர் பஞ்சாயத்து யூனியன், கடையம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் கடந்த சில மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாததால் அவர்களது வாழ்க்கை நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும் அதைத் தவிர்க்க வழிவகைத் தேட வேண்டுமென்பதுமாகும்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட விவர அறிக்கையை அளிக்கிறேன் :—

நிலவரி ஒப்படை, உள்ளூர்க் கல்வி மானியம், கல்வித் துணை மானியம், சிறப்பு அகவிலைப் படி மானியம் ஆகிய அரசாங்க மானியங்களிலிருந்து தொடக்கக் கல்விக்காகும் செலவை ஊராட்சி ஒன்றியங்கள் சரிக்கட்டி வருகின்றன. நிலவரி ஒப்படையும் கல்வித் துணை மானியமும் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் ஏப்ரல் முதல் நாளன்று பள்ளிக் கல்வித்துறை இயக்குனரால் வழங்கப் படுகின்றன. உள்ளூர்க் கல்வி மானியம், இரண்டு அரையாண்டுத் தவணைகளில், அதாவது ஜூலையிலும் அக்டோபரிலும் வழங்கப்படுகிறது. முந்திய அரையாண்டுக் காலத்தில் அகவிலைப்படிக்காகச் செலவிடப்பட்ட தொகையின் அடிப்படையில் ஒவ்வோர் அரையாண்டிற்கும் ஆகஸ்டு, பிப்ரவரி மாதங்களில் சிறப்பு அகவிலைப்படி மானியத்தை வழங்கவும் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ஒப்பளிப்பு வழங்குகிறார்.

1968-69-ம் ஆண்டுக்காக சிறப்பு அகவிலைப்படி மானியத்தின் இரண்டாவது தவணைத்தொகை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு 15—2—1969-ம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு அளிக்கப்படத் தக்கதாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலை மிக இடர்ப்பாடானதாக உள்ளமையாலும் 1968, நவம்பர் திங்களுக்கான சம்பளங்களை ஆசிரியர்களுக்கு வழங்க நிதி வசதி இல்லாமையாலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு மானியத்தின் இரண்டாவது தவணைத் தொகையை முன்கூட்டி அளிக்கும்படி பள்ளிக் கல்வித்துறை இயக்குநருக்கு அனுமதி வழங்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தை வேண்டினர். அவ்வண்ணமே 15—2—1969-ம் தேதிக்கு முன்னர் 31—3—1969-ம் தேதியுடன் முடிவுறும் அரையாண்டுக்கான சிறப்பு

அகவிலைப்படி மானியத்தின் நிதிநிலைக் குறைவால் இடர்ப்படும் ஊராட்சி ஒன்றிய குழுக்களுக்கு முன்னதாக அளிக்கப் பள்ளிக் கல்வித்துறை இயக்குனரை அனுமதித்து அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்தது.

இதற்கிணங்க, இராதாபுரம், திருச்செந்தூர், வாசுதேவ நல்லூர், கடயம், உடன்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் 26–1–1969-ல் ஆணைகள் அனுப்பினர். மண்டபம் ஊராட்சி ஒன்றியக் குழு சம்பந்தமாக, சிறப்பு அகவிலைப்படி மானியம் 28–1–1969-ல் வழங்கப்பட்டது.

31—3—1969 தேதியுடன் முடிவுறும் அரையாண்டுக்காக முன்னதாகவே சிறப்பு அகவிலைப்படி மானியத்தை வழங்கவேண்டி, மண்டபம் உட்பட்ட பல ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடமிருந்தும் அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்தன. பள்ளிக் கல்வித்துறை இயக்குனரால் சிறப்பு அகவிலைப்படி மானியம் அளிப்பதற்கான புள்ளி விவரங்கள் தயாரிக்க பல ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தேவையான செலவு விவர அறிக்கையை குறித்த காலத்தில் அளிக்கவில்லையென்றாலும், வழிவகை நிதி நிலை மிகவும் இடர் பாடாக உள்ளதென்று தெரிவித்த ஊராட்சி ஒன்றிய குழுக்களுக்கு 19—2—1969-ம் தேதிக்கு முன்னரே, சிறப்பு அகவிலைப்படி மானியத்தை முன்கூட்டி வழங்கப் பள்ளிக் கல்வித்துறை இயக்குனருக்கு அரசாங்கம் தனி அனுமதி வழங்கியது. இதற்கு ஏற்ப, பள்ளிக் கல்வித்துறை இயக்குனர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்கனவே ரூ. 45.53 லட்சம் வழங்கியுள்ளார். அவர் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் முன் மானியத் தொகை ரூ. 1.32 லட்சம் வழங்கியுள்ளார்.

III. GOVERNMENT RESOLUTION

AMENDMENT TO NOTIFICATION UNDER SECTION 7 OF THE COTTON TRANSPORT ACT, 1923 (CENTRAL ACT III OF 1923)

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1923-ஆம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 111/1923) 7-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் திருத்தி மாநில அரசாங்கம் வெளியிடும் அறிவிப்பின் கீழ்க்கண்ட வரைவிற்கு மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம்.

வரைவு அறிவிப்பு

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ஆம் நாளன்று பிறந்து 25—12—1968 நாளிட்ட தமிழ்நாடு அரசாங்க இதழில் 1-ஆம் பாகத்தில் விதிகள் பிற்சேர்க்கையின் 899-902-ஆம் பக்கங்களில்